**மறுசீரமைப்பு கட்டமைப்பு**



**வாருங்கள் மறு பேச்சுவார்த்தையில் ஈடுபடலாம்**

## மறுசீரமைப்பு கட்டமைப்புடன் தொழில் ஒப்பந்தங்களுக்கு மறுபேச்சுவார்த்தை செய்தல்

# செயல்முறை

**15 ஜனவரி முதல் 26 பிப்ரவரி 2021** வரை, கொவிட்-19 நிலவரத்தால் குறிப்பிடத்தக்க பாதிப்புக்கு உள்ளான தகுதிபெறும் சிறிய, மற்றும் மிகச் சிறிய தொழில் நிறுவனங்கள், தங்களது ஒப்பந்தப் பங்காளிகளுடன் செய்திருக்கும் குறிப்பிட்ட சிலவகை ஒப்பந்தங்களுக்கு மறுபேச்சுவார்த்தை நடத்த மறுசீரமைப்பு கட்டமைப்பு (Re-Align Framework) வழிவகுக்கும். மறுசீரமைப்பு கட்டமைப்பு நடைமுறையின் சுருக்கமான விளக்கத்தைக் கீழே காணலாம்.

### 15 ஜனவரி முதல் 26 பிப்ரவரி 2021 வரை

**1** பாதிப்புக்கு உள்ளான தொழில் நிறுவனம் மறுசீரமைப்பு கட்டமைப்பின்கீழ் உதவி பெற விரும்பினால், ஒப்பந்தத்தின் மற்ற தரப்புக்கு அல்லது தரப்பினர்களுக்கு (“மற்ற தரப்பு”) 26 பிப்ரவரி 2021 தேதிக்குள் **பேச்சுவார்த்தை அறிவிப்பை அனுப்பி வைக்கவேண்டும்**

### 4 வாரப் பேச்சுவார்த்தை காலகட்டம்

**2** ஒப்பந்தத் தரப்பினர்கள் பேச்சுவார்த்தை நடத்த 4 வாரக் காலகட்டம் அளிக்கப்படும். தரப்புகள் கலந்து பேசி, ஒருவர் மற்றவரது நிலையைப் புரிந்துகொண்டு, புதிய தொழில் சூழ்நிலைக்கு ஏற்ப அனைத்து தரப்புகளுக்கும் ஏற்புடைய முறையில் ஒப்பந்தத்தைச் சீரமைக்க முயற்சி செய்யவேண்டும்

*பேச்சுவார்த்தை நிறைவேறினால்*

*பேச்சுவார்த்தை நிறைவேறாவிட்டால்*

### 2 வார ஆட்சேபக் காலகட்டம்

**3** ஒப்பந்தத் தரப்பினர்கள் திருத்தியமைத்த ஒப்பந்தத்தைச் செயல்படுத்துவார்கள், அல்லது அனைத்து தரப்பினர்களும் ஏற்றுக்கொண்ட நிபந்தனைகளின்படி ஒப்பந்தத்தை ரத்து செய்வார்கள்

*பாதிப்புக்கு உள்ளான தொழில் நிறுவனம் கட்டமைப்பின்கீழ் தகுதி பெறுவதை மற்ற தரப்பினர் எதிர்க்காவிட்டால்*

**4a** ஆட்சேபக் காலகட்டம் முடிவடைந்த 2 நாட்களுக்குப் பிறகு ஒப்பந்தம் ரத்தானதாகக் கருதப்படும்

*(i) பாதிப்புக்கு உள்ளான தொழில் நிறுவனம் கட்டமைப்பின்கீழ் தகுதி பெறுவதை மற்ற தரப்பினர் எதிர்த்தால், அல்லது (ii) மற்ற தரப்பினர் இழப்பீடு கோரும் ஒரு சிறு நில உரிமையாளராக இருந்தால்*

**4b** மற்ற தரப்பினர் (i) **ஆட்சேப அறிக்கையை** மற்றும்/அல்லது (ii) **இழப்பீட்டுக்கான அறிக்கையைத்** தாக்கல் செய்யும். இவ்விவகாரம் மதிப்பீட்டாளரிடம் செல்லும்போதும் ஒப்பந்தம் தொடர்ந்து நடப்பிலிருக்கும்

*ஒப்பந்தம் ரத்தானவுடன் ஏற்கவேண்டிய பொறுப்புகளின் தொடர்பில் தரப்பினர்களால் இணக்கம் காண முடியாவிட்டால்*

### 2 வார ஆட்சேபக் காலகட்டத்திற்குப் பிறகு சரியாக்கல் அறிக்கையைத் தாக்கல் செய்யவும்

**5** தரப்பினர்கள் **சரியாக்கல் அறிக்கையைத்** தாக்கல் செய்யலாம். இவ்விவகாரம் மதிப்பீட்டாளரிடம் ஒப்படைக்கப்படும்



ஒப்பந்தம் ரத்தானவுடன் ஏற்கவேண்டிய பொறுப்புகள், கடமைகள் ஆகியவற்றைப் பொருத்தமான சரியாக்கங்களுடன் மதிப்பீட்டாளர் நிர்ணயிக்கலாம்

MINISTRY OF LAW
SINGAPORE

**மேல் விவரம் அறிய, www.go.gov.sg/re-align என்ற இணையப்பக்கத்தை நாடுங்கள்**

2020-COVID-INFO2